2020 பிப்ரவரி 20]

(ஆ) நிகழ்ச்சி நிரலில் உள் இனங்களின் வரிசை எண்கள் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிகழ்ச்சி நிரலில் உள் இனங்களின் வரிசை எண்கள் மாற்றம், மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 7–ல் குறிப்பிடப்பட்டுள்ள உள் இனம்–1 என்பதை உள் இனம்–2 எனவும், உள் இனம்–2 என்பதை உள் இனம்–1 எனவும் மாற்றி எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 7–ல் குறிப்பிடப்பட்டுள்ள உள் இனம்–1 என்பதை உள் இனம்–2 எனவும், உள் இனம்–2 என்பதை உள் இனம்–1 எனவும் மாற்றி எடுத்துக்கொள்ளப்பெறும்.

4. அறிவிப்புகள்

(ஆ) தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2020 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல் சட்டமுன்வடிவை ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*